பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 107

வியாழக்கிழமை
13 மார்ச் 2025

மாசி 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## காடுகளை காத்தவர்கள் புலிகள்தான்!

தமிழர் தாயகத்தின் வனப் பகுதிகள் விடுதலைப்புலிகளால் பாதுகாக்கப்பட்டன என்று நாடாளு மன்ற உறுப்

11

# திஸ்ஸ விகாரைக் காணி எங்களின் பூர்விக நிலம்!

## பொதுமக்கள் பெருமளவில் திரண்டு தையிட்டியில் நேற்றும் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையின் காணி எங்களின் பூர்விக நிலம். ஆதலால், அதை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

11

யாழ். மாவட்டச் செயலக

## சுதந்திரதின செலவுகளை வழங்குவதில் பின்னடிப்பு!

» 02

## புலிகளின் நீச்சல் தடாகம்; பயன்படுத்த அனுமதிக்குக

ஆளுநரிடம் கோரிக்கை

» 09

## அதீத எரிபொருள் பயன்பாடு; அங்கஜன் மீதும் விசாரணை!

நாடாளுமன்றத்தில் வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 13

தமது பதவிக்காலத்தில் அளவுக்கு அதிகமான எரிபொருளைப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் முன்னாள் துணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதனுக்கு

11

## கொக்குவில் வாள்வெட்டு; நால்வர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம், கொக்குவில் பகுதியில், கடந்த மூன்றாம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டு

11

அநுராதபுரம் மருத்துவமனையின்

## பெண் மருத்துவர் துஷ்பிரயோகம்; பிடிபட்டார் முன்னாள் சிப்பாய்!

கொழும்பு, மார்ச் 13

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் மருத்துவர், கத்திமுனையில் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமையுடன் தொடர்புடைய முன்னாள் சிப்பாயான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் தப்பிச்சென்றிருந்த நிலையில், அவரைக் கைதுசெய்யுமாறு வலியுறுத்தியும், மருத்து

11

## விபத்தில் முதியவர் உயிரிழப்பு

முல்லைத்தீவு, மார்ச் 13

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை

11

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான

## பெண்மருத்துவருக்கு நீதிகோரி மருத்துவர்கள் நேற்றுப் போர்!

வடக்கிலும் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பணியாற்றிய பெண் மருத்துவர், அவரின் விடுதிக்குள் வைத்து ஆயுத முனையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதைக்

11

உள்ளூராட்சித் தேர்தல்

## தபால் விண்ணப்பம்; ஏற்புக்காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 13

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்

11



'ஒளிச்சு மறைக்கினம் என்டால் ஏதோ வில்லங்கம் இருக்கும் போல'

காற்றாலை ஒப்பந்தம்

## மாற்றங்களுக்கு இடமேயில்லை!

அதானி விடாப்பிடி

» 11

## கச்சதீவுப் பெருவிழா ஏற்பாடுகள் முழுமை

யாழ்ப்பாணம், மார்ச் 13

கச்சதீவுப் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை ஆரம்பமாகவுள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகள் முழுமையடைந்

11

ஜனாதிபதி அநுரவின்

## போக்குவரத்துச் செலவு விவரத்தை வழங்குவதற்குப் பின்னடிப்பு

பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாம்

கொழும்பு, மார்ச் 13

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த ஜனவரி மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்துசென்ற நிலையில், அவரின் போக்குவரத்துச் செலவு தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு ஜனாதிபதி செயலகம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

11

## காங்கேசன் ரயில்நிலைய அதிபராக தேவராஜ சர்மா



யாழ்ப்பாணம், மார்ச் 13

காங்கேசன்துறை ரயில்நிலைய அதிபராக எஸ்.ரி.சுரேந்திரன் தேவராஜ சர்மா நியமிக்கப்பட்டுள்ளார். காங்கேசன்துறை ரயில் நிலைய அதிபராக

11

மக்கள் ம[illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.03.2025 வியாழக்கிழமை

**கொவிசெத**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 4015
ஆங்கில எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 10 17 25 58
விசேட எழுத்து: W

**ஹந்தஹண ராசி சுப பலன்**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1082
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 08 19 22 35

**NLB ஜய**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 041
ஆங்கில எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 2 0 7 1

**மெகா பவர்**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 2121
ஆங்கில எழுத்து: C
சுப்பர் இலக்கம்: 11
வெற்றி இலக்கங்கள்: 10 11 17 78

**மஹஜன சம்பத**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 5773
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 5 6 7 5 9 9

**தன நிதானய**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 1803
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கங்கள்: 39 54 76 82
விசேட எழுத்து: C

**அத சம்பத**
திகதி: 12.03.2025
சீட்டிழுப்பு இலக்கம்: 348
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 7 5 9 9

**சுபிரி தன சம்பத**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
வெற்றி வாரம்: 0481
ஆங்கில எழுத்து: O
வெற்றி இலக்கம்: 7 2 4 4 4 9

**Super Ball**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
சீட்டிழுப்பு வாரம்: 2747
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கம்: 12 18 34 37

**சனிதா**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: R
வெற்றி இலக்கம்: 05 33 42 44
வெற்றி வாரம்: 4908

**லக்ன ராசி**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
துலாம் (symbol)
வெற்றி இலக்கம்: 09 45 47 54
சீட்டிழுப்பு வாரம்: 4459

**KAPRUKA**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: F
சுப்பர் இலக்கம்: 20
வெற்றி இலக்கம்: 34 44 53 55
வெற்றி வாரம்: 1923

**அத கோடிபதி**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கம்: 12 44 54 73
வெற்றி வாரம்: 2573

**JAYODA**
திகதி: 12.03.2025
தினம்: புதன்கிழமை
ஆங்கில எழுத்து: C
வெற்றி இலக்கம்: 05 08 30 59
வெற்றி வாரம்: 2111

# அதானி விவகாரத்தில் அரசு ஒரே நிலைப்பாடு

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 13**

**அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. மக்களுக்குச் சுமையாக அமையும் வேலைத்திட்டங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பொருத்தமான வேலைத்திட்டங்களை அதானி முன்வைத்தால் அவை தொடர்பாக ஆராயப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அதானி தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின் பின்னர் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுவது உண்மையல்ல.

நாம் முதலீடுகளை ஊக்குவிக்கின்றோம். எமக்குப் பொருத்தமான முதலீட்டுக்கான முன்மொழிவுகளை அதானி நிறுவனம் முன்வைத்தால் அது தொடர்பில் வெளிப்படையாக பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

உத்தேச காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தில் மின் அலகொன்றுக்கான விலை தொடர்பில் அரசாங்கத்துக்கு ஸ்திரமான நிலைப்பாடொன்று உள்ளது. விலை திருத்தத்தை மேற்கொள்ள விரும்பினால் பேச்சுகளைத் தொடரலாம். அவ்வாறில்லை எனில் அவர்கள் விரும்பினால் திட்டத்தை இரத்துச்செய்துகொள்ளலாம். இதன்மூலம் ஏனைய சகல முதலீட்டாளர்களும் வெளியேறுகின்றனர் என்று அர்த்தமில்லை.

எந்த முதலீடானாலும் அது எம்மால் தாங்கிக்கொள்ள முடியாததாக இருக்கும் பட்சத்தில், அதனால் ஏற்படக்கூடிய சுமையை மக்கள் மீது சுமத்த வேண்டியேற்பட்டால் அவ்வாறான திட்டம் எமது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது - என்றார். (எ-இ)

### யாழ்.மாவட்டச் செயலக

## சுதந்திரதினவிழாச் செலவு; வழங்குவதில் பின்னடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தினால் கடந்த நான்காம் திகதி முன்னெடுக்கப்பட்ட சுதந்திரதினக் கொண்டாட்டங்களின் செலவினத்தை முழுமையாக வழங்குவதை யாழ் மாவட்டச் செயலகம் இழுத்தடிப்பு செய்துவருகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி யாழ் மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட சுதந்திரக் கொண்டாட்டங்களுக்கான செலவினம் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் கோரப்பட்டிருந்தது. குறித்த தகவலை வழங்கவேண்டிய 14 வேலை நாள்களையும் கடந்து கடந்த 5 ஆம் திகதி மொத்த செலவினத்தின் ஒரு பகுதியை மாவட்டச் செயலகம் வழங்கியது.

அதில் சுதந்திர தின கொண்டாட்டங்களின் ஒத்திகைக்காக 31 ஆயிரத்து 104 ரூபா செலவழிக்கபட்டுள்ளது என்றும் குறித்த நாளில் முக்கியஸ்தர்கள், மாணவர்கள் ,பங்குபற்றுனர்களின் சிற்றுண்டி மற்றும் உணவுகளுக்காக 80 ஆயிரத்து 746 ரூபா வற்வரி உள்ளடங்கலாக செலவழிக்கபட்டுள்ளது என்றும் மதகுருக்களுக்கான பரிசுப்பொருள்களுக்கு 7400 ரூபாய் செலவழிக்கபட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய வாகனப் போக்குவரத்து செலவினங்கள் தவிர மொத்தமாக ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 520 ரூபா செலவினம் மாவட்டச் செயலகத்துக்கு சுதந்திரதினக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பட்டுள்ளது. வாகனப் போக்குவரத்துச் செலவினங்கள் தொடர்பில் வழங்குவதாக மாவட்டச் செயலகம் தெரிவித்த போதிலும் இதுவரை அந்த செலவின விவரம் வழங்கப்படவில்லை . (ச-125)

## தமிழரசிலிருந்து விலகிய காண்டீபன்

யாழ்ப்பாணம், மார்ச் 13

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்றுப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினர் சி.காண்டீபன் அந்தக் கட்சியிலிருந்து விலகுவதாக தெரிவித்து கட்சியின் பதில் பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் எருவில் வட்டாரத்தில் போட்டியிட்டு அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதத்துக்கும் அதிகமான மக்கள் ஆணையைப் பெற்று சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்றி கட்சி வளர்ச்சிக்காகவும் செயற்பட்டேன். கட்சியின் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணாக எனக்கு வேட்பாளராக இடம் தராமல் புறக்கணிக்கப்பட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## 5,882 ஆட்சேர்ப்பு

கொழும்பு, மார்ச் 13

வெற்றிடமாக உள்ள பதவிகளை நிரப்ப பல்வேறு துறைகள் மற்றும் அமைச்சகங்களின் இணைந்த அமைப்புகளின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்கள் 5,882 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அதற்கமைய பிரதமரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவின்படி, இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு அந்தந்த அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒப்புதல் கோரப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (ச-இ)



## கட்சி தாவிய ஜே.ஆர். பேரன்

கொழும்பு, மார்ச் 13

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான, ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன, சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவியிருந்த நிலையில் இவர் தற்போது மீண்டும் கட்சி தாவியுள்ளார். அவருடன் இணைந்து மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளும் சர்வஜன அதிகாரத்துடன் இணைந்துள்ளனர்.

உள்ளாட்சி சபைத் தேர்தலில் சர்வஜன அதிகாரத்தை வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே அந்தக் கட்சியில் இணைந்துள்ளோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து முறைமைகளும் படிப்படியாக மாற்றப்படும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

**அம்பாறை, மார்ச் 13**

**நாட்டின் அனைத்து முறைமைகளும் ஆட்சியாளர்களின் பாதுகாப்புக்காக, அவர்களின் தேவைக்கு ஏற்றவாறு மாற்றப்பட்டுள்ளன. தற்போதைய அரசாங்கம் அனைத்து முறைமைகளையும் மக்களுக்கு சேவையாற்றுவதற்கு ஏற்றவகையில் படிப்படியாக மாற்றி வருகின்றது.**

இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். அம்பாறையில் நடைபெற்ற சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த 5 மாதங்களில் அரசாங்க அதிகாரிகளிடமோ, பொலிஸாரிடமோ இதைச் செய்யவேண்டாம், இதைச் செய்யுங்கள் என்ற அழுத்தமும் கொடுக்கப்படவில்லை. அந்தக் கலாசாரத்தை மாற்றியுள்ளோம். சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. நாட்டின் அனைத்துச் சேவைகளும் படிப்படியாகச் சரியான திசைக்குக் கொண்டுவரப்படுகின்றன. இதை 24 மணிநேரத்தில் செய்துவிட முடியாது. காலம் தேவை. நாட்டைச் சரியான திசைக்கு கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. இன்று ஒரு சின்னத் தவறைச் சொன்னாலோ, ஒரு சின்னத் தவறைச் செய்தாலோ எதிரணியில் இருந்து பெரிய சத்தம் கேட்கிறது. நாங்கள் அதை விரும்புகிறோம். இந்த அரசியல் கலாசாரத்தையே மக்கள் எதிர்பார்த்தனர்.

நாட்டின் அரச சேவை அரசியலால் சீரழிக்கப்பட்டிருந்தது. இன்று அந்தச் சேவைக்கு மதிப்பளிக்கும் சூழல் உருவாகி, சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சூழல் உருவாகியுள்ளது - என்றார். (எ-26)



## காங்கிரஸ் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்ப்பாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி கட்டுப்பணம் செலுத்தியுள்ளது. கட்டுப்பணத்தைக் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் யாழ் தேர்தல் திணைக்களத்தில் நேற்றுக் காலை செலுத்தியுள்ளார். (ச-20,125)

## தேசபந்துவின் ரிட்மனு தீர்ப்பு 17இல்

கொழும்பு, மார்ச் 13

தன்னைக் கைதுசெய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மீதான இறுதித் தீர்ப்பு எதிர்வரும் 17 ஆம் திகதி வழங்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## தாய் கொலை பிள்ளைகள் கைது

கொழும்பு, மார்ச் 13

மாத்தளை கொலொன்கந்த பிட்டிய பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தாய் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு தீ வைத்து எரித்துக் கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தம்புள்ளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் கொலைசெய்யப்பட்டவரின் மகளும், மகனும், மருமகளும் சந்தேகத்தின் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)



## கிளிநொச்சியில் சுற்றுலா மையம்

கிளிநொச்சி, மார்ச் 13

கிளிநொச்சிக் குளத்தையண்டிய கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதியில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முகமாக உருவாக்கப்பட்ட சுற்றுலா மையம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சி குளத்தினுள் விசைப்படகு, துடுப்பு படகு ஆகிய பொழுதுபோக்குச் சேவைகள், பாரம்பரிய உணவுகள், இயற்கை குளிர்பானங்கள் விற்பனையகம் மற்றும் சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுகள் என்பன இந்தச் சுற்றுலா மையத்தில் அமைக்கப்பட்டுள்ளன. (ச-113)

## ரூபா ஏற்றம்

கொழும்பு, மார்ச் 13

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று உயர்வடைந்துள்ளது. இதன்படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 299.79 ரூபாவாகவும், கொள்வனவு விலை 291.25 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ச)

## பதினம் தெரியுமோ?

**தோ**லிருக்கச் சுளை விழுங்கிறமாதிரி ஏ.ரி.எம். கார்ட் இல்லாமலே காசை எடுத்த கதையொண்டு நேற்று பட்சி சொன்னதெல்லோ. கிட்டத்தட்ட இதுவும் அப்பிடியொரு சம்பவம்தான். ஆனால் கொஞ்சம் வித்தியாசம். கிட்டடியில வெளிநாட்டால வந்த ஒருத்தர் அக்சிடெண்ட் பட்டதால, அவரை ஆஸ்பத்திரியில சேர்த்தவை. ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் இடையில ஓடியாடி வேலை செய்ய அவையின்ர வீட்டில ஆக்கள் இல்லையெண்டதால, பெறாமகள் பிள்ளை ஒண்டுதான் எல்லா அலுவலும் பார்த்தவா. ஊரிலையும் ஆக்களுக்கு உதவி செய்யிறதெண்டு அவாக்கு நல்லபேர். அதால தங்கட ஏ.ரி.எம். கார்ட்டையும் அவாட்ட குடுத்துத்தான் காசு எடுப்பிச்சவை. வருத்தமெல்லாம் மாறி அவர் வீட்ட போனபிறகுதான், அவரின்ர கார்ட்டில கனக்கக் காசு வெட்டுப்பட்டிருக்கெண்டு தெரிய வந்திருக்குது. உடன அந்தப் பெறாமகளைக் கூப்பிட்டு கேட்டிருக்கினம். அவா தான் ஒருசதமும் எடுக்கேலை எண்டு சொல்லிப்போட்டா. அப்ப வேற ஆரோதான் என்னவோ செய்திருக்கினம் எண்டு, அக்சிடெண்ட் பட்டு ஆஸ்பத்திரியில இருந்தவர் கே.கே.எஸ்.பொலிஸில முறைப்பாடு குடுத்திருக்கிறார்.

அதைவைச்சு பொலிஸ்காரர் அந்தக் கார்ட்டில இருந்து எங்கையெங்க காசு வெட்டுப்பட்டிருக்கு எண்டு நோட்டம் விட்டிருக்கினம். ஒரு போன் கடையில கனகாசு வெட்டுப்பட்டிருக்கெண்டு கண்டுபிடிச்சு, அந்தப் போன்கடையில அவ்வளவு காசுக்கு ஆர் போன் வாங்கினவர் எண்டும் பிடிச்சிட்டினம். ஆள் வேற ஆருமில்லை, அந்தப் பெறாமகளின்ர லவ்வர்தானாம். லவ்வருக்கு இந்தக் கார்ட் காசைப் பாவிச்சு போன் மட்டுமில்லை, இன்னும் கனக்கச் சாமான்களை அந்தப் பெறாமகள் வாங்கிக் குடுத்திருக்கிறா. அதைவிட ஒரு நல்லவேலையும் ஆள் செய்திருக்கு. இப்பிடி ஓசியாக் கிடைச்ச கார்ட்டில கொஞ்சப் பள்ளிக்கூடப் புத்தகப்பையளை வாங்கி, கஷ்டப்பட்ட பிள்ளையளுக்கும் குடுத்திருக்கிறா. உண்மை வெளியில வந்தவுடன அந்தப் பெறாமகள் பொலிஸில போய், "நான் முழுக்காசும் கட்டிறன். கேஸ் போட்டிடாதையுங்கோ" எண்டு கெஞ்சினதால, கார்ட்காரரும் மன்னிச்சு விட்டிட்டாராம்.

இப்பிடி அந்தப் பெறாமகள் இன்னும் சிலபேரின்ர ஏ.ரி.எம்.கார்ட்டுகளைப் பாவிச்சு, காசு எடுத்து ருசிகண்டவா எண்டு அதுக்குப் பிறகுதான் எல்லாருக்கும் தெரியவந்திருக்காம். இப்பிடி ஆற்றையோ காசை ஆட்டையைப் போட்டு, அதை ஊருக்குக் குடுக்கிறமாதிரி கிள்ளித் தெளிச்சுப்போட்டு, மிச்சத்தையெல்லாம் தாங்களே சுருட்டிற ஆக்களுக்குத்தான் இப்ப காலம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் இருப்பதால் மகிழ்ச்சியாகக் காணப்படுவீர்கள். தாய்வழி உறவினர்கள் வகையில் சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது. சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** அதிர்ஷ்டகரமான நாளாக இருக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். விற்பனையும் லாபமும் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். அரசாங்கக் காரியங்கள் சற்று இழுபறிக்குப் பிறகே முடியும். திடீர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமை காப்பது நல்லது.

**சிம்மம்:** மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிற்பகலுக்கு மேல் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். தாயின் ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை தரும். பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும். பணிகளில் கூடுதல் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமை நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் நலனில் கவனம் தேவை. உற்சாகமும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**துலாம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும். புதிய முயற்சி எடுப்பதற்கு உகந்த நாள். எதிரிகள் வகையில் ஏற்பட்ட பிரச்சினைகள் மறையும். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முடிவு சாதகமாக முடியும்.

**விருச்சிகம் :** எதிலும் பொறுமை அவசியம். சகோதரர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சலுகை கிடைப்பது தள்ளிப்போகும். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பார்கள்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். வெளியூரிலிருந்து நீண்டநாளாக எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கக்கூடும்.

**மகரம்:** உற்சாகமான நாள். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இளைய சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். புதிதாகத் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தேவையற்ற செலவுகள் ஏற்படுவதால் மனதில் சஞ்சலம் ஏற்படக்கூடும். குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். மனஸ்தாபம் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 13

வடமராட்சி, தென் புலோலியூர் பச்சிமப்புலகான நகர தான்தோன்றீஸ்வரர் அருள்மிகு உபய கதிர்காமம் ஆலய ஸ்ரீசக்கர சண்முக தேவஸ்தான புனராவர்த்தன அஸ்டபந்தன பஞ்சகுண்ட பகஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.46 மணி முதல் கர்மாராம்பமும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெற்று, புதன்கிழமை காலை 9.39 மணி முதல் 11.38 மணி வரையான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ச-22,100)

# கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்ற ந.சிவகுமாரனுக்கு கௌரவிப்பு நிகழ்வு சாவகச்சேரிப் பிராந்தியத்தின் ஏற்பாட்டில் திருமதி வ.சுமதி தலைமையில் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக சி.க.கூ. சங்க சமாசத் தலைவி திருமதி ச.பரமானந்தன், சி.க.கூ. சமாசச் செயலாளர் திருமதி த.புஸ்பராசா ,கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.நிமலரூபன், சாவகச்சேரி ப.நோ.கூ.ச. பொதுமுகாமையாளர் யோ. தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர் . (ச-22,159)



# வெங்காயச்செய்கை மழையால் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 13

யாழ்.குடாநாட்டில் பெய்துவரும் மழையால் வெங்காயச் செய்கையின் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அறுவடைசெய்து காயவைக்கப்பட்ட புகையிலைகளும் மழையில் நனைந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளன என்றும் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-41-17)

## கவனவீர்ப்பு செயல்வாதம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயற்பாட்டு நிகழ்வின் தொடர்ச்சியாக 'பெண்களுக்கு எதிரான அனைத்து சுரண்டல்களையும் முடிவுக்குக் கொண்டு வர மௌனத்தைக் கலைப்போம்' எனும் தொனிப்பொருளில் மக்கள் செயல்வாத கவனவீர்ப்புப் பேரணி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திற்கு முன்பாக ஆரம்பித்து தந்தை செல்வா கலையரங்கம் வரை சென்றடையவுள்ளது. (ச-22, 159)



யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு கல்லூரியின் முதல்வர் நா.மகேந்திரராசா தலைமையில் கல்லூரியின் தியான அரங்கில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-22)

# ஏகசண்டி ஹோமம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13

பருத்தித்துறை கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை ஏகசண்டி ஹோமம் இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி ஏக சண்டி ஹோமம் இடம்பெறவுள்ளன.

ஏக சண்டி ஹோமத்துக்கு வருகைதரும் அடியவர்கள் தேவையான பால், இளநீர், தயிர், பழவகைகள், பூக்கள் போன்ற அபிஷேகப் பொருள்களை வழங்கி ஆசாரசீலர்களாக வருகைதந்து சண்டிகா பரமேஸ்வரி அம்பிகையின் அருளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச-22,100)

# பிறப்புச்சான்றிதழ் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 13

நடமாடும் சேவை மூலம் பிறப்புச்சான்றிதழ் வழங்குவதற்கு யாழ். மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை பிறப்புச் சான்றிதழ் பதிவுசெய்யாத பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்கான நடமாடும் சேவை யாழ். மாவட்ட பதில் செயலர் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி. ப. 3 மணி வரை இடம்பெறவுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் தேவையானவர்கள் உரிய ஆவணங்களுடன் வந்து பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுப் பயனடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-22,100,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நீங்கள் செய்யவிரும்பும் எதையும் செய்வதற்கு, இப்போது ஒன்றும் அதிக தாமதமாகிவிடவில்லை.

– மைக்கேல் ஜோர்டன்–

# பாரபட்சங்களும் அவசியமே!

இலங்கையின் கல்விமுறைமை தொடர்பிலோ அல்லது கல்விக் கட்டமைப்புத் தொடர்பிலோ திருப்தியடைய முடியாத நிலையே காணப்படுகின்றது என்று பகிரங்கமாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார் கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய. இந்தப் பின்னடைவைச் சரிசெய்வதற்காக இம்முறை 11 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் அறிவித்திருக்கின்றார். ஒரு தோல்வியை அல்லது பின்னடைவை ஏற்றுக்கொள்வதுதான் அடுத்த கட்டத்தை நோக்கிய பயணத்துக்கான ஆரம்பப்புள்ளியாக அமையும். ஆதலால், பிரதமரின் பக்குவம் பாராட்டப்படவேண்டியது. அதில் விவாதிப்பதற்கு ஒன்றுமில்லை - விவாதத்துக்கு அவசியமும் இல்லை. இங்கே விடயம் என்னவென்றால், கல்விக் கட்டமைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள 11 ஆயிரம் மில்லியன் ரூபாவை சமமான அடிப்படையில் பகிர்வது உறுதிப்படுத்தப்படவேண்டும் என்பதாக நாடாளுமன்றத்தில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. 'சமமான பங்கீடு' என்பது ஒருபோதும் சமத்துவம் என்ற பொருளைத் தராது. சிலவேளைகளில் பாரபட்சங்களும், ஏற்ற இறக்கங்களும்கூட சமத்துவம்தான். எனவே, கல்விக் கட்டமைப்புக்கான ஒதுக்கீடுகளை நிலையறிந்து மேற்கொள்வதற்குப் பிரதமர் ஹரிணி முன்வரவேண்டும்.

இரண்டு பேரைக் கொண்ட குடும்பமொன்றுக்கும், நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கும் சமமான பங்கீடு என்ற பெயரில் குடும்பமொன்றுக்கு தலா ஒரு இறாத்தல் பாணைக் கொடுப்பது சரியாகாது. இந்த அடிப்படையைத்தான் கல்விக் கட்டமைப்பிலும் ஏற்படுத்தவேண்டும். போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளாக வடக்கும், கிழக்கும், பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக மலையகமும் இன்று காணப்படுகின்றன. எனவே, ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் கணிசமானவை வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிப் பாடசாலைகளுக்கும், அவற்றின் கல்விக் கட்டமைப்புக்காகவுமே செல்லவேண்டும். ஏனெனில், அங்குதான் தேவை அதிகம் உள்ளது. வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகியவற்றின் கல்விக் கட்டமைப்புக்கும், மேல் மாகாணத்தின் கல்விக் கட்டமைப்புக்கும் இடையிலான வித்தியாசம் என்பது மிகப்பெரியது. இந்த இமாலய வித்தியாசம் ஒருவகையில் நாட்டுக்கு வெட்கக்கேடும்தான். இன்னும் அடிப்படைக் கட்டமைப்புக்கள் உருவாக்கப்படாத எத்தனையோ பாடசாலைகள் இருக்கும் இதே நாட்டில்தான் கொழும்பில் நீச்சல் தடாகங்களைக் கொண்ட பாடசாலைகளும் இருக்கவே செய்கின்றன. அவ்வாறான மேம்பட்ட வசதிகள் ஏற்படுத்தப்படாவிட்டாலும் கணினிகள், நூலகங்கள், திறன் வகுப்பறைகள் ஆகியன ஒவ்வொரு பாடசாலைகளிலும் உருவாக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு ஒதுக்கீடுகள் 'பாரபட்சமான முறையில்' மேற்கொள்ளப்பட வேண்டும்.

நாட்டின் தற்போதைய கல்விக் கட்டமைப்பில் காணப்படும் பிரமாண்டமான வேறுபாடுகளும் பாரபட்சங்களும் இல்லாமலாகவேண்டுமாயின், இனிவரும் காலங்களில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பகுதிகளுக்கு பாரபட்சமான முறையில் (சாதகமான) ஒதுக்கீடுகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வரவேண்டும். அந்தப்பாரபட்சம்மிக அவசியமும்கூட.




# நலிவுற்றோருக்கு அரசாங்கத்தால் தென்னங்கன்றுகள்



கொழும்பு, மார்ச் 13

குறைந்த வருமானம் பெறும் 2 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச தென்னங்கன்றுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி, ஒரு குடும்பத்திற்கு 2 தென்னங்கன்றுகள் என்ற அடிப்படையில் 4 இலட்சம் தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளன என தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த வருடம் 25இலட்சம் தென்னங்கன்றுகளை நடுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## அரசியலிலிருந்து பஸில் விடை

கொழும்பு, மார்ச் 13

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ச தற்போது பெரமுனவின் அரசியல் நடவடிக்கைகளில் இருந்து முழுமையாக விலகியுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சாணக தெரிவித்துள்ளார்.

இதனால், கட்சியின் ஒழுங்கமைப்புச் செயற்பாடுகளை தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தற்பொழுது முன்னெடுத்து வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)



## விமானத்தில் சில்மிஷம் யாழ்.முதியவர் கைது

கொழும்பு, மார்ச் 13

இந்தியாவின் மும்பையிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்த விமானத்தில் பயணித்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நயினாதீவைச் சேர்ந்தவரும் தற்போது சுவீடன் நாட்டில் வசிப்பவருமான 65 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். குறித்த நபர் அதிக மது போதையில், சக பயணிகளிடம் மோசமாக நடந்துகொண்டதுடன், விமான பணிப்பெண்களிடமும் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## 'அஸ்வெசும' கொடுப்பனவு விநியோகம்

கொழும்பு, மார்ச் 13

2025 மார்ச் மாதத்துக்கான அஸ்வெசும கொடுப்பனவு நேற்று வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ளதென நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

குறித்த பயனாளிகள் இன்று முதல் தங்கள் அஸ்வெசும வங்கிக் கணக்கிலிருந்து உதவித்தொகையைப் பெறமுடியும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

## மீளாய்வு பெறுபேறு வெளியீடு

2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த பெறுபேறுகளை www.doenets.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## தீயணைப்புச் சேவைக்கு தேசியத் திட்டம்



கொழும்பு, மார்ச் 13

சேவை வழங்கலின்போது ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்த்து சேவையை முறையாக மேற்கொள்வதற்காக தீ அணைப்பு சேவைக்காக தேசிய திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பிரபா ருவன் செனரத் தெரிவித்துள்ளார். (ச-இ)



நாளை
வெள்ளிக்கிழமை - மாசி - 30
14.03.2025
சுபநேரம் : 06.21 - 07.51
ராகுகாலம் : 10.51 - 12.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுநிலா கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 13
உரும்பிராய் ஞானவைரவ கோவிலடி சனச மூக நிலையம் நடத்தும் முழுநிலா நாள் கருத்தரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.
நிலையத் தலைவர் இரா.ஜெயக்குமார் தலைமையில் சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் இடம்பெறவுள்ள நிகழ்வில் வளவாளராக இயற்கை விவசாய ஆர்வல ரும் சமூக சேவையாளருமான சிவசரவண பவன் சுந்தரேஸ்வரன் கலந்துகொள்ளவுள் ளார். (ச-41)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 13
ஐயனார் முன்பள்ளி மற்றும் கண்ணன் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு ஐயனார் முன்பள்ளித் தலைவர் வ.கிருஷாந் தலைமையில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வேலணை துறையூர் ஐயனார் விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி திருமதி மாதுரி நிரோசன் கலந்துகொள்ள வுள்ளார். (ச-41)

## சீர்மியம் நூல் வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 13
பொதுச்சுகாதாரப் பரிசோதகரும் கவிஞரு மான ஆ.ஜென்சன் றொனால்டின் 'சீர்மி யம்' சிறுகதை நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபை தலைமைக் காரியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் முதன்மை விருந்தினரான கிளி நொச்சி மாவட்ட சமுதாய மருத்துவ நிபு ணர் மருத்துவக் கலாநிதி ஜேசபின் திரு மகள் சிவசங்கர் ஆய்வுரையையும், சிறப்பு விருந்தினரான உளவளத்துணையாளர் அ.அஜந்தன் நயப்புரையையும் நிகழ்த்த வுள்ளனர். (ச-41)

## மகளிர்தின நிகழ்வு

கிளிநொச்சி, மார்ச் 13
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர்தின நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10மணி யளவில் பிரதேச செயலக மாநாட்டு மண் டபத்தில் இடம்பெறவுள்ளது. (ச-41)

★★★★

கிளிநொச்சி, மார்ச் 13
பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச மகளிர்தின நிகழ்வு பச் சிலைப்பள்ளிப் பிரதேச செயலாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நாளை வெள் ளிக்கிழமை காலை 10மணியளவில் பிர தேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வட.மாகாண மகளிர் விவ கார அமைச்சின் உதவிச்செயலாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா செயலாளர் திருமதி ராஜினி மோகனதாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

படம்: ஐ.சிவசாந்தன்



யாழ்ப்பாணம் கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுப்புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41)

# குடும்பங்களுக்கான நாடு இலங்கை முதலிடம்!!

யாழ்ப்பாணம், மார்ச் 13
**உலகின் குடும்பங்களுக்கு மிகவும் உகந்த நாடாக இலங்கை முதலிடத்தில் தரவரி சைப்படுத்தப்பட்டுள்ளது.**

கோண்டே நாஸ்ட் டிராவலர் மற் றும் ரெமிட்லியின் குடியேற்றக் குறியீட்டின் புதிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது. கல்வித்தரம் மற்றும் குழந்தை பராமரிப்பு செலவுகளை அடிப்படையாகக் கொண்ட தரவரி சையிலேயே இலங்கை முதலி டம் பிடித்துள்ளது. சுவீடன் மற் றும் நோர்வே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்க ளைப் பிடித்துள்ளன. அதேநே ரத்தில் அமெரிக்கா 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. (ச-இ)

## விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 13
கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் முன் னாள் தலைவரும், கலைஞரும், எழுத்தாளருமான பேராசிரியர் பால.சுகுமாரின் படைப்புகளும் தொகுப்புகளும் எனும் தலைப் பிலான விசேட கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் சுழிபுரத்தில் அமைந்துள்ள கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள் ளது.
கலாநிதி ந.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள கலந்து ரையாடலில் கருத்துரைகளைத் தமிழகப் பேராசிரியர் இரா.பிர பாகரும், ஆய்வாளர் சி.விமலனும் விசேட உரையை பேராசிரி யர் பால.சுகுமாரும் ஆற்றவுள்ளனர். (ச-41)

## சங்குக் கூட்டணியினர் வவு.வில் கட்டுப்பணம்

வவுனியா, மார்ச் 13
வவுனியா மாநகரசபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட் டியிட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று வவு னியா மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப் பணம் செலுத்தியது.
அதற்கான கட்டுப்பணத்தை கட்சியின் மாவட்ட இணைப்பாளர் செ.மயூரன், புளொட் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சந்திர குலசிங்கம், ஈ.பி.ஆர்.எல் கட்சியின் முக்கியஸ்தர் மோசஸ், ரெலோ அமைப்பின் மாவட்ட அமைப்பாளர் சந்திரபத்மன் உள்ளடங்கிய கட்சி உறுப்பினர்கள் செலுத்தியிருந்தனர். (ச-18)



## கிராம அலுவலர்மீது கிளிநொச்சியில் தாக்குதல்

கிளிநொச்சி, மார்ச் 13
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலா ளர் பிரிவுக்குட்பட்ட கிருஷ்ணபுரம் பகுதி யில் கிராம அலுவலர் ஒருவர் மீது தாக் குதல் நடத்தப்பட்டுள்ளதாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.
நான்கு பெண்கள் குறித்த கிராமஅலுவ லரிடம் தமது வதிவிடத்தை உறுதிப்படுத் தித் தருமாறு வருகை தந்தபோது அவர்க ளிடம் கிராம அலுவலர் சரியான ஆவ ணங்களைக் கொண்டுவாருங்கள் என்று தெரிவித்துள்ளார். அதனையடுத்து வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்ட அவர்கள் கிராம அலு வலர்மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபர்க ளில் ஒருவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது அவரை விளக்கமறி யலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள் ளது. (ச-113)

## முப்பொன் விழாவின் கலாசாரப்பவனி இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 13
நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அடிகளாரின் பிறப்பின் முப்பொன்தொடக்க விழாவை முன் னிட்டு இன்று வியாழக்கிழமை கலாசாரப் பவனி நடைபெறவுள்ளது.
இந்தக் கலாசாரப்பவனி அச்சுவேலி பேருந்து நிலையத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி புனித திரேசாள் பாடசாலையில் முடிவடையும்.
இதில் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, இள வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட மகாவித்தியாலயம், யாழ்ப்பாணம் திருக்குடும்பக் கன்னியர்மடத் தேசிய பாடசாலை, மானிப்பாய் புனித அன்னாள் பாடசாலை, அச்சுவேலி மகாவித்தியாலயம், அச் சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி ஆகிய வற்றின் அதிபர், ஆசிரியர்கள், யாழ்.மறைவ மாவட்டப் பங்குகளைச் சேர்ந்த மக்கள், அச்சு வேலி மக்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.
பாடசாலை மாணவர்களின் கலாசாரப் பவனி அணிக்கைகளோடு நாதஸ்வர இசை, வட்டுக் கோட்டை குதிரையாட்டம் ஆகியன நிகழ்வை அலங்கரிக்கவுள்ளன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குரிய பாவித்த பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

- காலம் : 20.03.2025 – வியாழக்கிழமை மு.ப 10.00 மணி
- இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், யாழ் வீதி, மானிப்பாய்

மேலதிக விபரங்கள், நிபந்தனைகளை சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலக பெயர்ப் பலகைகளில் பார்வையிடலாம். அல்லது 021225-6647 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
மானிப்பாய்

(CR/44556) J-1

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி நிரஞ்சினி பிரேமச்சந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அமிர்தநாதர் இராசாத்தி**

அவர்கள் நேற்று (12.03.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்தார். இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
**யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.**

(CS/57724) J-1

# தரவுக் கட்டமைப்பு தவறென்றவர்களே அதை ஏற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது

## நாமல் ராஜபக்ச கூறுகின்றார்

தரவுக் கட்டமைப்பு முகவர் நிலையத்தை உருவாக்கினால் தரவுகள் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் என்று குற்றஞ்சாட்டியவர்களே, அது தவறு என்று குறிப்பிடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அரச கட்டமைப்பை டிஜிட்டல் மயப்படுத்தத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவோம். இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

டிஜிட்டல் பொருளாதாரக் கொள்கைத் திட்டங்களை அரசாங்கம் உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. ஆயினும் அரசாங்கத்தின் கொள்கைக்கும், இலக்குக்கும் இடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன. டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக 15 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் அதற்கான திட்டங்கள் முன்வைக்கப்பட வில்லை. வரி இல்லாமல் டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஊடாக ஒரு பில்லியன் டொலரைப் பெறுவது சவால் மிக்கதாக உள்ள நிலையில், வரி கொள்கைகளுடன் 15 பில்லியன் டொலர் என்ற இலக்கை அடைவது என்பதும் சவால்மிக்கது.

இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் தரவுப் பாதுகாப்பு முகவர் நிலையத்தை அமைப்பதற்கு எமது அரசாங்கத்தில் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம். தரவு முகவர் நிலையத்தை அமைப்பதால் நாட்டின் உள்ளகத் தரவுகள் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் அல்லது திருடப்படும் என்று தற்போதைய அரசாங்கம்தான் அப்போது வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டது. அன்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இன்று வெளிநாட்டு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் தரவு பாதுகாப்பு முகவர் நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளனர். அன்று குறிப்பிட்டது தவறு என்று இன்று கூறும் நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

தரவுப் பாதுகாப்பு முகவர் நிலையத்தை அமைத்து, சட்டப் பாதுகாப்பை வலுப்படுத்தினால் தரவுகளை மோசடி செய்ய முடியாது. தரவுப் பாதுகாப்பு முகவர் நிலையத்தை அமைப்பதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். அரச சேவை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பு டிஜிட்டல் மயப்படுத்தப்படவேண்டும்-என்றார். (ஏ-இ)

# வேலையாள் தேவை

சாவகச்சேரியில் வீட்டு வேலைகளை தங்கியிருந்து செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 196 6541**

(CS/57723) J-1

# வீடும் காணியும் விற்பனைக்கு

ஆதி மயிலிட்டியில் நேர்த்தியான சூழலில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 3 அறைகளைக் கொண்ட வீடு விற்பனைக்குண்டு தரகர்களுக்கு தகுந்த தரகுப்பணம் வழங்கப்படும்

**077 187 5740**

(cs 577720) (s)

# Thunukkai Pradeshiya sabha – Thunukkai

Invitation For Bid Council - 2025 has been published on Uthayan news paper dated 01.03.2025 and there was mentioned source of fund "Council" and Contract No :- "NP/44(5)/03/PROC/2025/COUNCIL/NS/01" which are changed as source of fund "PSDG", Contract No :- "NP/44(5)/03/PROC/2025/PSDG/NS/01"

**Bid Opening date : 14.03.2025 Time : 15.00**

Chairman,
Local Authority Procure committee
Thunukkai predeshiya Sabha, Thunukkai
13.03.2025

(CR/44563) J-1

# மரண அறிவித்தல்



தாயின் மடியில்
**09.09.1948**

இறைவன் அடியில்
**09.03.2025**

## கந்தையா நமசிவாயம்

**(முன்னாள் வர்த்தகர் - ஸ்ரீவிஷ்ணு அசோசியேட்ஸ், எம்.ஜி.இரட்ணசேன & சன்ஸ், கொழும்பு)**

சரவணை கிழக்கு வேலணையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நமசிவாயம் அவர்கள் கடந்த 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதியின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) - கனகம்மா தம்பதியின் அன்பு மருமகனும், வடிவாம்பிகை (கனடா - முன்னாள் மொழிபெயர்ப்பாளர் கல்வி அமைச்சு கொழும்பு) அவர்களின் அன்புக் கணவரும், அனுஜன், நிரந்தரி, Dr.அர்ஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr.அமண்டா அவர்களின் அன்பு மாமனாரும், அஜா வின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி (ஓய்வுநிலை ஆசிரியர்), புஷ்பராணி மற்றும் யோகமங்களம், பாக்கியலட்சுமி (ஓய்வுநிலை ஆசிரியர்), இராதாமணி (ஓய்வுநிலை ஆசிரியர்), இரவீந்திரன் (முகாமையாளர் - Maruthi money Exchange (PVT)Ltd) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அருணகிரிநாதன் (ஓய்வுநிலை ஆசிரியர்), தியாகராசா, காலஞ்சென்ற கணேசபிள்ளை (ஓய்வுநிலை பிரதம லிகிதர்) மற்றும் ஞானபண்டிதன் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சிவநிதி, காலஞ்சென்றவர்களான சுந்தராம்பிகை, கமலாம்பிகை மற்றும் ஸ்ரீநிவாசன் (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற ஸ்ரீகிருஷ்ணராஜா (ஓய்வுநிலை போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி) மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா (பொறியியலாளர்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீவிசாகராஜா (ஓய்வுநிலை ஆசிரியர்), மாதவாம்பிகை மற்றும் Dr. ஸ்ரீஜெயராஜா, சாரதாம்பிகை (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற யசோதராம்பிகை மற்றும் ஸ்ரீகணேசராஜா (ஓய்வுநிலை பொறுப்பதிகாரி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.03.2025) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**திருமதி ஞா. இராதாமணி (சகோதரி)**
**077 981 4551**

(CS/57721) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கல்விச் சீரமைப்பு அடுத்தாண்டு ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 13

புதிய கல்வி மறுசீரமைப்பை 2026ஆம் ஆண்டு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்குள் அதற்கான தயார்ப்படுத்தல்கள் முன்னெடுக்கப் படும் என்று பிரதமரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழு கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் கூடிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரி வித்தார். (எ-இ)


## 2 ம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
**இராமபிள்ளை சண்முகநாதன்**

எங்களை விட்டுப் பிரிந்த அன்பு தெய்வமே!
நீங்கள் பிரிந்து இரண்டு
ஆண்டுகள் ஆனதே–இன்னும்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
எங்கள் உள்ளத்தில் நீங்கள் வாழ்வீர்கள்
நீங்கள் இல்லாத வீடு
வெறிச்சோடிவிட்டதே ஐயா!
உங்கள் பிரிவால் வாடும்

மனைவி
மகன் (கோபி)
மகன் (கஜன்)
மருமகள்
பேரப்பிள்ளைகள்

தோற்றம் 22.04.1951
மறைவு 07.03.2023
077 529 3064

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 12 . 1939
மறைவு 09 . 03 . 2025



**ஐயம்பிள்ளை சண்முகம்**

நெடுந்தீவு மேற்கு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யோகபுரம் மல்லாவியை முன்னைய வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும், தோணிக்கல் வவுனியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சண்முகம் அவர்கள் கடந்த 09.03.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - பொன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், தனலட்சுமி, தனபாலன், விஜி, சௌந்தரராசன், கோவிந்தராசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மராசா, தவரஞ்சினி, மோகனதாசன், கமலினி, விஜிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், நிருசன், அபிசேக், சத்தியப்பிரகாஸ், பிரியந்தா, அனாமியன், சர்விகா, தனிகா, தனிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இராமநாதன், சேதுப்பிள்ளை, கமலம், பகவதி, ஐயையா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான பசுபதி, கோபால், ராணி மற்றும் பாலசிங்கம், சந்திரா, சந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (14.03.2025) வெள்ளிக்கிழமை மு.ப 10:00 மணியளவில் 63/1, சிவன் கோவில் வீதி, தோணிக்கல், வவுனியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

63/1, சிவன் கோவில் வீதி,
தோணிக்கல்.

தகவல்: குடும்பத்தினர்
076 980 4162

*CS/29086) J-1

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 . 04 . 1958
மறைவு 16 . 02 . 2022



அமரர் **அன்பழகி இராசேந்திரம்**

கடவுள் கொடுத்த வரம்
கிடைக்கவில்லை எமக்கு
கடவுளே வரமாக கிடைத்தார்
எம் அம்மாவாக ...

புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
நந்தாவில் அம்மன் கோவில் முன்பாக

என்றும்அம்மாவின் நினைவுடன்
குடும்பத்தினர்

(CS/57729) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 10 . 1958
மறைவு 11 . 03 . 2025



**செல்வி ரதிகா செல்வரத்தினம்**

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரதிகா செல்வரத்தினம் நேற்றுமுன்தினம் (11.03.2025) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம்-பத்மவாசா தம்பதியின் சிரேஷ்ட மகளும் ரேணுகாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற விஜயவர்மனின் மைத்துனியும் லரூசனின் அன்புப் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இல 15, குளப்பிட்டி ஒழுங்கை
கொக்குவில் கிழக்கு

தகவல்:
திருமதி ரேணுகா விஜயவர்மன் (சகோதரி)

(CS 57728) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுபோதினி ஆணைக்குழு சிபாரிசை செயற்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## கஜேந்திரகுமார் எம்.பி. நாடாளுமன்றில் வலியுறுத்து

**கொழும்பு, மார்ச் 13**

**கல்வியலாளர்களுக்கு நாம் அதிகபட்ச ஆதரவை வழுங்கவேண்டும். அவர்களுக்கான சம்பளம் போதாது. அதிபர்கள், ஆசிரியர்கள் எடுக்கும் முயற்சியின் அளவுக்கும், அவர்களின் நல்லெண்ணத்துக்கும் போதிய வெகுமதிகள் கிடைப்பதில்லை.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி, உயர்கல்வி தொடர்பான குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது அரசாங்கம் ஒரு சம்பள அதிகரிப்பை வழங்கியுள்ளது. கடந்தகாலங்களில் ஆசிரியர்கள், அதிபர்கள் போராட்டங்கள் நடத்தியபோது தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களும் அதற்கு ஆதரவளித்திருந்தனர். நாடாளுமன்றத்திலும் பேசியிருந்தார்கள். அந்தப் போராட்டங்கள் காரணமாக 2022ஆம் ஆண்டு சுபோதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் முதற்கட்டத்தை அவர்கள் பெற்றனர். இரண்டாவது, மூன்றாவது கட்டங்கள் அடுத்தடுத்த இரு வருடங்களில் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அது நடக்கவில்லை.

தற்போதைய வரவுசெலவுத்திட்டத்தில் மூன்று ஆண்டுகளாகப் பிரிக்கப்பட்ட முதற்கட்ட சம்பள அதிகரிப்பு இந்த ஆண்டு வழங்கப்படுகிறது. அது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அரசாங்கம் பரிந்துரைக்கும் இந்தப் பாதீட்டின் கீழ் 66 ஆயிரத்து 880 ரூபா கிடைக்கும். தரம் 22 ஆசிரியருக்கு சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் கீழ் ரூபா 82 ஆயிரத்து 150 கிடைத்திருக்கும். இவை இரண்டுக்குமிடையில் 15 ஆயிரத்து 270 ரூபா வித்தியாசம் உள்ளது. ஆசிரியர் சேவை தரம் 2க்கு வித்தியாசம் 27 ஆயிரத்து 310 ரூபாவாக உள்ளது. அதுபோல ஆசிரியர் சேவை தரம் 1 இற்கு 34 ஆயிரத்து 990 ரூபா வித்தியாசம் உள்ளது. தரம் 3 அதிபர் சேவை வித்தியாசம் 9 ஆயிரத்து 870 ரூபாவாகவும் தரம் 2 அதிபர் சேவைக்கான வித்தியாசம் 25 ஆயிரத்து 120 ரூபாவாகவும் தரம் 1 அதிபர் சேவை வித்தியாசம் 32 ஆயிரத்து 230 ரூபாவாகவும் உள்ளது.

குறைந்தபட்சம் அடுத்த ஆண்டு பாதீட்டின் மூலமாவது சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைபெற்றால் நான் அதன் வலுவான ஆதரவாளராக இருப்பேன்.

சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டால் இந்த அவையில் உள்ள ஒரு உறுப்பினர்கூட அதை எதிர்க்கமாட்டார்கள் என நம்புகின்றேன் என்றார். (எ-இ)



விளையாட்டுவீரர்களின் வளர்ச்சிக்காக

# புலிகளின் நீச்சல் தடாகத்தை பயன்படுத்த அனுமதியுங்கள்

## வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 13

தமிழீழ விடுதலைப்புலிகளால் பயன்படுத்தப்பட்ட நீச்சல் தடாகத்தை விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தத் தரவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்டச் சங்கத் தலைவரும், மருத்துவருமான உதயசீலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் முல்லை பிரிமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டி புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கலந்துகொண்டிருந்த நிலையில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் விடுதலைப்புலிகளால் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட நீச்சல் தடாகம் தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த நீச்சல் தடாகத்தையே விளையாட்டு வீரர்களின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு

**செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா ?**
**கவலை வேண்டாம்**

ரூபா 9999 /= மட்டுமே
செலுத்தி செவிப்புலன்
கருவி ஒன்றினை
உங்களுடையதாக்கி
கொள்ளுங்கள்.
வீட்டிற்கே வந்து
பரிசோதித்து
வழங்குகின்றோம்
முற்பதிவு செய்ய மற்றும்
மேலதிக விபரங்களுக்கு
**அழையுங்கள்**



(CS 2715) S-1

**077 434 6245**


# இஸ்லாமிய விவகாரங்களில் மூக்கை நுழைக்கிறார் அர்ச்சுனா

## அஷ்ரப் தாஹிர் கடும் கண்டனம்

கொழும்பு, மார்ச் 13
இஸ்லாமிய விவாகம், விவாகரத்துச்சட்டம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா சபையில் தெரிவித்த கூற்றுகளை மீளப்பெற வேண்டும் என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கல்வியமைச்சின் மீதான வரவு -செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா எமது மார்க்கத்துக்குள் மூக்கை நுழைத்து விட்டார். அவர் அதைத் தெரிந்துசெய்தாரா? அல்லது விளம்பரத் துக்காகச் செய்தாரா? என்பது புரியவில்லை.

நாங்கள் புனித இஸ்லாம் மார்க்கத்தை ஏற்றுள்ளோம். எங்களது மார்க்கம் பூரணப்படுத்தப்பட்டு விட்டது. அதில் எவரும் மூக்கை நுழைத்து மாற்றங்களைச் செய்ய முடியாது - என்றார். (எ-இ)


## மரண அறிவித்தல்



**தோற்றம்**
**14 . 03 . 1982**

**மறைவு**
**20 . 02 . 2025**

**அமரர் வடிவேல் சாந்தன்**

யாழ். கலட்டியை பிறப்பிடமாகவும், பிரன்ஸினை வதிவிடமாகவும் கொண்ட வடிவேல் சாந்தவேல் (தம்பி) அவர்கள் (20.02.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ் பிரபல தொழிலதிபர் வடிவேல்-ஜெயவாணி (இலங்கை) தம்பதியின் அன்பு மகனும் சாந்தரூபன் (ஜேர்மனி), சாந்தகுமார் (பிரான்ஸ்), சாந்தரூபி (ஜேர்மனி), சாந்தவரன் (பிரான்ஸ்) சாந்தவிஸ்ணு (பிரான்ஸ்), சாளினி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஜிதா (ஜேர்மனி), சர்மிளா (பிரான்ஸ்), பிரதீபன் (ஜேர்மனி), அஜித்தா (பிரான்ஸ்), சொளன் (பிரான்ஸ்), ரமேஷ்குமார் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் திபிதா, நிகாஷ், மீனுதா, அஷ்சியா, சஸ்மியா, ஹரிசன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் தனுஷ், தாருஷன், தரணிகா, சஹானா, சைலன், சையானா, சபீஷன், வர்ஷா, அஸ்வினா ஆகியோரின் சித்தப்பாவும் சீத்தா, சவி (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2025) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் 95 Rue Marcel Sembat, 93430 villetaneuse க்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சாந்தன் (அப்பா) : 077 467 2340 (இலங்கை)
சாந்தகுமார் (அண்ணா) : 061 579 8279 (பிரான்ஸ்)
சாந்தவரன் (அண்ணா) : 076 850 8047 (பிரான்ஸ்)
சாந்தவிஷ்ணு (தம்பி) : 065 175 6937 (பிரான்ஸ்)

தகவல்: சுதன்

(CS 2712) V-1


# ஐ.தே.க. கூட்டத்தில் வாக்குவாதம்

ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றபோது குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர்களுக்கும், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையிலேயே இவ்வாறு குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இரு அங்கத்தவர்கள், தாங்கள் நீண்ட நாள்களாக கட்சிக்கு சேவை செய்துள்ளதாகவும் ஆனால் இடையில் வருகைதந்த ராஜிதாவை வைத்து பிரதான செயற்பாடுகளை மேற்கொள்ளவது கவலையளிப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது ரணில் விக்ரமசிங்க உடனடியாக அவர்களை பேசவிடாது தடுத்து ஆசனத்தில் அமருமாறு பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

எனினும் முறையான பதில் எதுவும் கிடைக்காத காரணத்தினால் குறித்த உறுப்பினர்கள் இருவரும் கூட்டத்தில் இருந்து வெளியேறியிருந்தனர். (ச-இ)

# சம்பள முரண்பாட்டை தீர்க்கக் கல்விச்சபை

கொழும்பு, மார்ச் 13
ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடு மற்றும் சேவை நிலையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காகக் கல்விச்சபையை உருவாக்குவதற்கான நிருபம் கல்வி அமைச்சரால் எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

கல்விக்கு என்றும் முன்னுரிமை வழங்குவோம் என்பதை அதிகாரத்தில் இல்லாதபோது குறிப்பிட்டோம், தற்போதும் அதேநிலையில் உள்ளோம். இந்த ஆண்டு ஆசிரியர் சேவையில் 7 ஆயிரத்து 913 நியமனங்கள் வழங்கப்படும் - என்றார். (எ-இ)



# அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழு யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 13
வடக்குக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அலுவலர் கெவின் பிரைஸ் தலைமையிலான குழுவினர் நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வருகைதந்திருந்தனர்.

இதன்போது வடக்கு நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டதோடு துணைவேந்தர், பல்கலைக்கழகப் பதிவாளர், நிதியாளர், பீடாதிபதிகள், அலுவலர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

வடக்குக்கு மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள குறித்த அமெரிக்கத் தூதரகக் குழுவினர் காங்கேசன்துறையில் அமைந்துள்ள துறைமுகங்கள் அதிகாரசபையின் வதிவிட முகாமையாளர், இலங்கைக் கடற்படையின் வடபிராந்திய அதிகாரிகள், மன்னாரில் அமைந்துள்ள வலுசக்தி அமைச்சின் காற்றாலை மின்னுற்பத்தி செயற்றிட்ட அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-41-125)


## பொது அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை

**நிறுக்கும், அளக்கும் உபகரணங்ளை சரிபார்த்தல் மற்றும் முத்திரை பதித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்**

மாவட்ட செயலரின் அறிவுறுத்தலுக்கமைய எமது சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சகல வியாபார நிறுவனாங்களிலும் வர்த்தகர்களினால் பயன்படுத்தப்பட்டு வரும் சகல நிறுவை. அளவை மற்றும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்களினை 2025 / 2026 ஆம் ஆண்டிற்கான பரிசோதனை செய்தல். சரி பார்த்தல் மற்றும் முத்திரை பதிக்கும் செயற்பாடுகள் கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைக்கமைய நடைபெறவுள்ளது.

| தொ.இல | திகதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | 2025.03.17 | மு.ப 9.00 – பி.ப 1.00 வரை | நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், கொக்குவில் |
| 2 | 2025.03.18<br>2025.03.19<br>2025.03.20<br>2025.03.21 | மு.ப 9.00 – பி.ப 1.00 வரை | நல்லூர் பிரதேச சபை உப அலுவலகம், திருநெல்வேலி |

எனவே வர்த்தகர்கள் அனைவரும் மேற்குறித்த தினங்களில் தங்கள் வியாபார நிலையங்களில் உள்ள சகல நிறுவை. அளவை உபகரணங்களினையும் பரிசோதனைக்குட்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**யு.ஜெலீபன்,**
**செயலாளர்,**
நல்லூர் பிரதேச சபை.

(CR/4456...) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடுகளை...

பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
வன்னிப்பெருநிலப்பரப்பு எப்போதும் காடுகளை அதிகமாகக்கொண்ட நிலப்பரப்பாகவே காணப்படுகின்றது. அங்குள்ள மக்களின் வாழ்வு தொன்றுதொட்டு இயற்கையோடு இணைந்ததொன்றாகவே காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் என்றும் இயற்கையோடு முரண்பட்டதில்லை. காடுகளை அழித்ததில்லை. 2009ஆம் ஆண்டுவரை வெட்டப்பட்ட மரக்குற்றிகளால் நிரப்பப்பட்ட கனகர வாகனங்கள் எம் வீதியால் சென்றதை நாம் கண்டதில்லை.
மரம் அரிகின்ற இயந்திரவாள்களின் கொடூர ஓசையை நாம் கேட்டதில்லை. 2009ஆம் ஆண்டு வரை வனவளத்திணைக்களமும், வன உயிரிகள் திணைக்களமும் எமது இடத்தில் இருக்கவில்லை. ஆனாலும் விடுதலைப்புலிகளின் வனவளப்பிரிவு இருந்தது. இயற்கையை நேசித்த வன்னியர்களின் வாழ்க்கை முறை இருந்தது. இதனால் வனப்பகுதிகள் அழிக்கப்படவில்லை. காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் வெட்டு மரங்களாகவும், விறகுத்தேவைகளுக்காகவும் பெருநகரங்களை நோக்கி ஏற்றிச்செல்லப்படவில்லை. காடுகள் மிகவும் கவனமாக காவல்செய்யப்பட்டன.
ஆனால் இன்று, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் உள்ளிட்ட வன்னிப்பகுதிகளில், வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் மக்களின் விவசாய மற்றும் குடியிருப்புக் காணிகளை அத்துமீறித் திருடியுள்ளன. இவ்வாறு மக்களின் காணித்திருட்டில் ஈடுபடும் திணைக்களங்களில் ஒன்றான வனவளத் திணைக்களம் வன்னியில் இடம்பெறும் சட்டவிரோத காடழிப்புச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி, வனவளத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதில்லை - என்றார். (அ-ம-26)

## திஸ்ஸ...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அழைப்பின் பேரிலும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களின் ஏற்பாட்டிலும் நேற்றுப் புதன்கிழமை மாலை 4 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.
போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது:-
தையிட்டியில் எமது பூர்வீக காணிகளை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து விகாரையை அமைத்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. விகாரை அமைக்கப்பட்டுள்ள பகுதி எங்களின் நிலம். எங்களின் நிலத்தை ஆக்கிரமித்துவிட்டு வேறு நிலங்களையும் இழப்பீடுகளையும் வழங்கும் எத்தனங்களை நாம் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை. விகாரையை அகற்றிவிட்டு, எங்களின் காணிகளை எங்களிடமே ஒப்படைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். எமக்கு எமது காணிகள்தான் வேண்டும் - என்றனர்.
நேற்று ஆரம்பித்த போராட்டம், பௌர்ணமி தினமான இன்று வியாழக்கிழமையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது.
போராட்டம் ஆரம்பமாகிச் சிறிதுநேரத்தின் பின்னர் போராட்ட இடத்திற்குச் சென்ற பலாலிப் பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட 22 பேர்களின் பெயர் குறிப்பிட்டு பலாலிப் பொலிஸார் ஊடாகப் பெறப்பட்ட மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினின் இடைக்காலக் கட்டளையை உரத்து வாசித்தனர். அந்தக் கட்டளையை போராட்ட இடத்தில் ஒட்டிவிட்டும் சென்றனர்.
அத்துடன் பொலிஸ் கண்காணிப்பும் நேற்றுப் பலப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-66-26)

## அதீத...

எதிராக விசாரணைகள் இடம்பெறவுள்ளன.
முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, முன்னாள் துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ச ஆகியோருக்கு எதிராகவும் அளவுக்கு அதிகமான எரிபொருள் ஒதுக்கீடுகளைப் பெற்றமை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
இது தொடர்பில் அவைத்தலைவர் பிமல் ரத்நாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-
முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன 2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிமுதல் ஒன்பது வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். மேலும் எரிபொருளுக்காக 33 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார்.
துணை சபாநாயகர் அஜித் ராஜபக்ச 2024ஆம் ஆண்டில் ஆறு வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். எரிபொருளுக்காக 13 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார். நாடாளுமன்றக் குழுக்களின் துணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் 2024ஆம் ஆண்டில் நான்கு வாகனங்களைப் பயன்படுத்தியுள்ளார். எரிபொருளுக்காக 7 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளார்.
இந்த நபர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதற்குரிய சாத்தியங்களை ஆராயுமாறு கோருகின்றேன் - என்றார். (அ-ம-இ)

## கொக்குவில்...

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
நபரொருவரின் கைவிரல் துண்டாகும்படியாக மேற்கொள்ளப்பட்ட இந்த வாள் வெட்டு பல்வேறுபட்ட அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. சந்தேகநபர்கள் தலைமறைவாக இருந்த நிலையில், அவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் துரிதப்படுத்தியிருந்தனர்.
யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய, யாழ்ப்பாணம் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கெலும்பண்டார தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து வாள்கள் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன.
அத்துடன், பிறிதொரு நபர் சட்டத்தரணி மூலம் சரணடைந்த நிலையில், அவரிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு அந்த நபரையும் கைது செய்தனர். சந்தேகநபர்கள் நால்வரும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-26-27-20)

## விபத்தில்...

யின்போது உயிரிழந்துள்ளார். சவுந்திர நாயகம் ஜெனாட் (வயது-73) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
புதுக்குடியிருப்பு ஒஸ்கா பாடசாலைக்கு அருகாக, பாண்பெட்டி கட்டிக்கொண்டு பயணித்த மோட்டார்சைக்கிள் அந்த முதியவர் மீது மோதியுள்ளது. இதன்போது பாண்பெட்டியால் பலமாகத் தாக்கப்பட்ட அவர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில் சிகிச்சையின்போது நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## தபால்...

குழு அறிவித்துள்ளது. தபால் மூலம் வாக்களிப்போரின் விண்ணப்பங்களை ஏற்கும் காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், தற்போது எதிர்வரும் 17ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை விண்ணப்பகாலம் நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (அ-ம-இ)

## மாற்றங்களுக்கு...

முன்னைய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் திட்டத்தைத் தொடர்வதற்குத் தயார் என்று இலங்கைக்கு அதானி குழுமம் அறிவித்துள்ளது.
புதுப்பிக்கத்தக்க மின்னுற்பத்தியில், அதானி நிறுவனம் விலைக்குறைப்புகள் மற்றும் திருத்தப்பட்ட கேள்வி கோரல்களை முன்வைக்கும் பட்சத்தில் அது தொடர்பில்பரிசீலிக்கலாம்என்று இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. இதையடுத்தே, திருத்தப்பட்ட கேள்வி கோரல்களுக்குச் செல்வதற்கு விரும்பவில்லை என்றும் முன்னைய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் 484 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை உற்பத்தி செய்வதற்குத் தயார் என்றும் அதானி குழுமம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)
(தொடர்புடைய செய்தி பக்கம் 02)

## போக்குவரத்துச்...

ஜனாதிபதியின் பயணச் செலவு தொடர்பில், தகவல் அறியும் உரிமைச்சட்டம் வாயிலாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கே இவ்வாறு தகவல் வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் பயணச்செலவுகள் தொடர்பான தகவல்களை வழங்கினால், அது அவரின் பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தலாக அமையும் என்பதாலேயே, தகவல் வழங்கமுடியாதுள்ளதாகவும் ஜனாதிபதி செயலகம் குறிப்பிட்டுள்ளது. எனினும், தகவலைப் பெறுவதற்காக மேன்முறையீடு செய்யும் வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது.
இதேவேளை, ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான விவரங்கள் அண்மையில் நாடாளுமன்றத்தில் வைத்து அறிவிக்கப்பட்டன. ஆதலால், வெளிநாட்டுப் பயண விவரங்களை வழங்குவது பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள் வராதா என்ற கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

## காங்கேசன்...

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே நீண்டகாலமாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதனால், தகவல் பரிமாற்றங்களுக்குப் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகப் பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இவ்வாறான நிலையிலேயே, அண்ணளவாக 10 வருடங்களின் பின்னர் தமிழர் ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ-ம-இ)

## கச்சதீவு...

துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாளை, நாளைமறுதினம் என இரண்டு தினங்கள் கொண்டதாக கச்சதீவுப் பெருவிழா நடைபெறவுள்ளது.
யாழ். மாவட்டச் செயலாளரின் ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கைக் கடற்படை, நெடுந்தீவுப் பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினது முழுமையான ஒத்துழைப்புடன் அண்மைய நாள்களாக ஏற்பாடுகள் இடம்பெற்றுவந்தன. இந்த நிலையில், திருவிழாவுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தற்போது முழுமையடைந்துள்ளன என்று தெரியவருகின்றது. இறுதிக்கட்டத் தயார்ப்படுத்தல் மற்றும் கண்காணிப்புப் பணிகளுக்காக நெடுந்தீவு பிரதேச செயலர் நிவேதிகா கேதீசன் தலைமையிலான குழுவினர் நேற்றுக் கச்சதீவுக்குக் களப்பயணம் மேற்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-100)

## பெண்...

கண்டித்தும், மருத்துவருக்கு நீதிகோரியும்நாடளாவியரீதியில்உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் நேற்றுப்பணிப்புறக்கணிப்புப் போராட்டம் இடம்பெற்றது.
வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து அரச மருத்துவமனைகளிலும் இந்தப் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், நாட்டில் உள்ள பல மருத்துவமனைகளில் கவனவீர்ப்புப் போராட்டங்களும் இடம்பெற்றன. இன்றுகாலை 8 மணிவரை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. மருத்துவர்களின் போராட்டம் காரணமாக, பல்லாயிரம் நோயாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்குச் சென்ற பலர் சிகிச்சைகளைப் பெறமுடியாது திரும்பிச்சென்றனர்.
(அ-ம-100-26-27-125-9-159-20-110-18-113)

## பெண் மருத்துவர்...

வர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் மருத்துவர்கள் நேற்று நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையடுத்தே சந்தேகநபர் நேற்றுக் காலை கல்னேவ பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர் என்பது விசாரணைகளில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மன்னாரில் தொழிற்சந்தை

மன்னார், மார்ச் 13

மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் தொழிற்சந்தை நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் உட்பட பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் கலந்துகொண்டனர். (ச-25,56)

**பணிப்பெண் தேவை**

நன்கு சமைக்கத் தெரிந்த வீட்டு வேலைகளை திறம்பட செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

Place - Jaffna kachcheri

Contact - 077 153 2398 , 077 072 5056

cs 27131 (2,6)

# இந்திய ஆசிரியர்கள் அழைப்பு; எனக்கு எந்தத் தொடர்புமில்லை

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 13

இந்திய ஆசிரியர்களை இலங்கைக்கு அழைத்துவருமாறு அரசாங்கத்திடம் நான் கோரிக்கை விடுத்ததாக வெளியாகும் செய்தியில் உண்மை இல்லை என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும்,

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய ஆசிரியர்களை அழைத்துவரவேண்டும் என நான் கூறவில்லை. 2017 ஆம் ஆண்டு இந்திய ஆசிரியர்களை அழைத்துவருவதற்கு முயற்சித்தவேளை ஜே.வி.பி.யினர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அதனால் நாம் அதனைச்செய்யவில்லை என்றே குறிப்பிட்டிருந்தேன். எனினும், நான் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தாக விடயத்தை மாற்றி எழுதியுள்ளனர். இது தவறு. இவ்விடயத்துடன் எனக்குத் தொடர்பு இல்லை- என்றார். (ச-44)

**வாடகைக்கு உண்டு**

யாழ் நகர எல்லைக்குள் சகல வசதிகளும் கூடிய சூழலில் 3 அறைகளுடன் புதுப்பிக்கப்பட்ட வீடு, போதிய வாகனத் தரிப்பிடம், AC, CCTV Camera வசதிகளுடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு

077 484 2578, 076 190 7701

(CS/57725) J-1

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57653) J-1

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றிநவிலலும்



தோற்றம் 22.01.1933 — மறைவு 12.02.2025

கடந்த 12.02.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த

எங்கள் குடும்பத் தலைவி

## பூபாலசிங்கம் இராஜேஸ்வரி

அவர்களின் 31 ம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு நாளை (14.03.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். மேலும், அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் முகநூல் மின்னஞ்சல் ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இராஜ வீதி,
திருநெல்வேலி

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.